கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைப்பீடம்

இரண்டாம் வருடக் கலைமாணிப் பரீட்சை – பருவம் II – 2017/2018

SOC 2219 – ஆய்வு முறையியல்

இரண்டு (02) மணித்தியாலங்கள்

மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக

---

1. 'வெற்றிகரமான ஆய்வினைச் செய்வதின் அடிப்படைப் படிமுறையாக அமைவது ஆய்வு வினா அல்லது கருதுகோள் ஒன்றினை உருவாக்குவதாகும்'. இக் கூற்றினை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? பொருத்தமான உதாரணங்களுடன் கலந்துரையாடுக.

2. 'ஒரு நிகழ்தகவு மாதிரியினைத் தெரிவு செய்யும் போது ஆய்வாளன் சனத்தொகையிலுள்ள ஒவ்வொரு நபர்களுக்கும் சமமானதும் சுதந்திரமானதுமான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்'. நீங்கள் இக் கூற்றினை ஏற்றுக் கொள்கிறீர்களா? பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

3. ஓர் ஆய்வானது அதன் பிரயோகம், நோக்கம் மற்றும் தகவல் சேகரிக்கும் வகை என்பவற்றின் அடிப்படையில் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதைக் கலந்துரையாடுக.

4. இலக்கிய மீளாய்வொன்றை மேற்கொள்வதன் பிரதான நோக்கங்கள் யாவை? பொருத்தமான உதாரணங்களுடன் கலந்துரையாடுக.

5. 'ஒவ்வொரு ஆய்வு நுட்பமும் அதற்குரிய சாதகங்கள் மற்றும் பாதகங்களைக் கொண்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில், ஆய்வாளர்கள் பாதகங்களைக் குறைத்துக் கொள்ளவும் சாதகங்களை அதிகரிக்கவும் ஒன்றுக்கு மேற்பட்ட நுட்பங்களைப் பயன்படுத்துகின்றனர்'. இக் கூற்றினைப் பொருத்தமான உதாரணங்களுடன் கலந்துரையாடுக.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச் (02)** சிறுகட்டுரை எழுதுக.
   (i) கலப்பு மாதிரித் தெரிவு முறை
   (ii) விடய ஆய்வு
   (iii) மையப்படுத்தப்பட்டக் குழுக் கலந்துரையாடல்கள்
   (iv) ஆய்வு ஒழுக்கவியல்

************